பிற அலுவல்களை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று கோருகிற இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு அனுமதி மறுக்கிறேன்.

(ஆ) மதுரையில் சாலையோரங்களில் விளையாட்டுப் பொருள்கள், பழங்கள் முதலியவை விற்கும் ஏழைகளுக்கு அபராதம், தண்டனை விதிப்பதால் ஏற்பட்டுள்ள சீர்குலைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திருமதி கே. பி. ஜானகி அம்மாள் அவர்கள் மதுரை நகரில் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள் சாலை ஓரங்களில் விளையாட்டுப் பொருள்கள், பழங்கள் போன்றவைகளை சிறு கூடைகளில் வைத்து விற்று வாழ்க்கை நடத்துபவர்களை தினசரி 5, 10 ரூ. அபராதம், தண்டனை, பொருள் விரயம் செய்து ஏழைகளின் வாழ்க்கையை சீர் குலைக்கும் நிலையைப் பற்றி விவாதிக்க ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

இது அரசாங்கத்தின் அன்றாட அலுவல்களுக்கு உட்பட்ட நிகழ்ச்சியாதலால் இந்த ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

## 5. வினக்களுக்கு விரைவாக விடையளிப்பது குறித்து பேரவைத் தலைவரின் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் மேலவையிலே விரைவாக விடை வருகிறது இங்கு வரவில்லை என்று குற்றம் சொன்னார்கள். அந்த நிலைமையை விளக்கி விட விரும்புகிறேன். திரு. ஹாண்டே அவர்கள் என்ன பொருள் பற்றித் தீர்மானம் கொடுத்தார்களோ, அது பற்றி மேலவை உறுப்பினர் ஒருவரால் 2—10—1969 அன்று கேள்வி கொடுக்கப் பட்டது. அந்தக் கேள்வி மீண்டும் 8—5—1970-லே புதுப்பிக்கப் பட்டது. அந்த 23—10—1969 அன்று கொடுக்கப்பட்ட கேள்விக்கு 10—4—1970 விடை வந்து விட்டது. 18—5—1970-ல் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட கேள்விக்கு 31—7—1970-ல் விடை தரப்பட்டது. அந்த விடை மேலவையில் 27—8—1970-ல் கொடுக்கப்பட்டது.

இங்கே டாக்டர் ஹாண்டே அவர்கள் 10—8—1970-ல் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தார்கள். அது 14—8—1970-ல் இலாகாவுக்கு அனுப்பப்பட்டது: அதற்கு விடை அரசிடமிருந்து 27—8—1970 அன்று கிடைத்தது. அதை இந்த அவையில் 29—8—1970-ல் கொடுத்திருக்கிறோம். ஆகவே, இதில் எந்தவித மான தாமதமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## 6. கவன ஈர்ப்பு.

குடியாத்தம் மருத்துவ மனையிலும், கல்லப்பாடி ஆரம்ப சுகாதார நிலயத்திலும் மருந்தின்மையால் மக்கள் அல்லல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் விதி 41 கீழ் மாண்புமிகு கல்வி,